**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109429

1. District மாவட்டம் : ஈரோடு PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு ஈரோடு Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 02/AC/2023 Date: நாள் 16.02.2023

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: —
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: —
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 13.02.2023 Date to : நாள் வரை 16.02.2023
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் மாலை 17.00 மணி நேரில் Time to : நேரம் வரை காலை 10.50 மணிக்கு செல்போனில்
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.02.2023 Time : நேரம் 16.00 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD Vol-I 16.02.2023 Time : நேரம் 17.00 மணி

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துமூலமாக (கணினி தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 58 கி.மீ வடமேற்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி உதவி பொறியாளர் (கி.பெ) அலுவலகம் தமிழ்நாடு மின்பகிர்மான கழகம், உக்கரம், சத்தியமங்கலம் வட்டம், ஈரோடு மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S.கீர்த்தி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் (லே) சுப்பிரமணியகவுண்டர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1975 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் விவசாயம் (g) Address : முகவரி கதவு எண் 8/172, புதுக்கோட்டை காலனி, உக்கரம் அஞ்சல், சத்தியமங்கலம் தாலுக்கா, ஈரோடு மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. சிங்காரம், கமர்சியல் அசிஸ்டெண்ட், உதவி பொறியாளர் (கி.பெ) அலுவலகம், தமிழ்நாடு மின்பகிர்மான கழகம், உக்கரம், சத்தியமங்கலம் வட்டம், ஈரோடு மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: தாமதமில்லை.
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது!

— தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது —

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..........—.......... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

S. Moorthy.
16.2.23

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

[signature] 16.2.2023

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

16.02.2023 17.30மணி

Name: பெயர் M. லேகா
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண் .........
ஊ.த.த.பிரிவு, சேலம்

**Attachment to Column 12 of FIR in Erode V&AC Cr.No 2/AC/2023 u/s 7(a) of PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018.**

**பணிந்து சமர்பிக்கப்படுகிறது:**

ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் M. ரேகா ஆகிய நான் 16.02.2023 தேதி மாலை 16.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது S.மூர்த்தி, த/பெ சுப்பிரமணிய கவுண்டர் (லேட்), கதவு எண்.8/172, புதுத்தோட்டம், காளிகுளம், உக்கரம் அஞ்சல், சத்தியமங்கலம் தாலுக்கா, ஈரோடு மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துமூலமான ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புநர் : S.மூர்த்தி, த/பெ சுப்பிரமணிய கவுண்டர் (லேட்), கதவு எண்.8/172, புதுத்தோட்டம், காளிகுளம், உக்கரம் அஞ்சல், சத்தியமங்கலம் தாலுக்கா, ஈரோடு மாவட்டம். பெறுநர் : இன்ஸ்பெக்டர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகம், கருங்கல்பாளையம், ஈரோடு. அய்யா, நான் மேற்படி முகவரியில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனக்கு உக்கரம் கிராமத்தில் சர்வே எண்.610/2, 3, 7-ல் 5 ஏக்கர் பூமி உள்ளது. அதில், விவசாயம் செய்து வருகிறேன். அந்த நிலத்தில் தான் தற்போது வீடு கட்டி வசித்து வருகிறோம். எங்களது வீட்டிற்கு அருகில் கோழிப்பண்ணை அமைக்கலாம் என்று முடிவு செய்தேன். அதற்காக கிழக்கு மேற்காக 200 அடி நீளம் மற்றும் 22 அடி அகலத்தில் தகர சீட் மேய்ந்து கோழிப்பண்ணை அமைக்க வேலை செய்து கொண்டிருக்கிறேன். அது முடியும் தருவாயில் உள்ளது. அந்த கோழிப்பண்ணைக்கு புதிதாக மின்சார இணைப்பு வேண்டும் என்று எனக்கு தெரிந்த ஒயரிங் காண்ட்ராக்டர் அவர்களிடம் சொன்னேன். அவர் மூலம் அதற்கான விண்ணப்பம் தயார் செய்து, அவர் சொன்னபடி சில ஆவணங்களை இணைத்து வைத்துக் கொண்டேன். பின்னர், கடந்த 13.02.2023-ம் தேதி அந்த அப்ளிகேசனை எடுத்துக்கொண்டு உக்கரத்தில் உள்ள மின்சார வாரிய அலுவலகத்துக்கு சென்றேன். அங்கிருந்த நபர் ஒருவரிடம் விசயத்தை சொல்ல அவர் கமர்சியல் அசிஸ்டெண்ட் திரு.சுந்தரம் அவர்களை பார்க்குமாறு சொன்னார். நானும், திரு.சுந்தரம் அவர்களை பார்த்து விசயத்தை சொல்லி நான் கொண்டு சென்றிருந்த அப்ளிகேசனை கொடுத்தேன். அதை அவர் வாங்கி பார்த்துவிட்டு, திரும்ப என்னிடம் கொடுத்து ஆன்லைனில் பணம் கட்டிவிட்டு இரசீதோடு அந்த அப்ளிகேசனை கொடுக்க சொன்னார். நானும், அந்த அப்ளிகேசனை பெற்றுக்கொண்டு, சத்தியமங்கலம் சென்று ஒரு கம்ப்யூட்டர் சென்டரில் ஆன்லைனில் பீஸ் கட்ட வேண்டிய விசயத்தை சொல்லி அப்ளிகேசனை கொடுத்தபோது, அவர் அதை வாங்கி பார்த்துவிட்டு அதற்கு ரூ.10,286/- கட்ட வேண்டும் என்று சொன்னார். நான் அவர் சொன்ன தொகையை அவரிடம் கொடுத்தேன். அவர் மின்சார வாரியத்திற்கு ரூ.10,286/-ஐ ஆன்லைனில் கட்டி இரசீதை என்னிடம் கொடுத்தார். நான் எனது அப்ளிகேசனையும், அந்த இரசீதையும் பெற்றுக்கொண்டு, அன்றே மாலை சுமார் 05.00 மணிக்கு மீண்டும் உக்கரம் மின்சார வாரிய அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த கமர்சியல் அசிஸ்டெண்ட் திரு.சுந்தரத்தை பார்த்து,

அப்ளிகேசனையும், பணம் கட்டிய இரசீது நகலையும் அவரிடம் கொடுத்தேன். அவர் அவற்றை வாங்கி கொண்டு சரி கரண்ட் சர்வீஸ் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன் என்றும், அதற்கு தனக்கு தனியாக ரூ.3,000/- கொடுக்க வேண்டும் என்றும் சொன்னார். நான் யோசித்துவிட்டு கொஞ்சம் குறைத்து கொள்ளுங்கள் சார் என்று அவரிடம் கேட்டேன். இதுவே ரொம்ப குறைவு என்று சொல்லிவிட்டு, வருகின்ற 15.2.2023-ம் தேதி புதன்கிழமை வந்து தன்னை பார்த்து தான் கேட்ட பணத்தை கொடுங்கள் சீக்கிரமாக கரண்ட் சர்வீஸ் கொடுத்துவிடலாம் என்று சொன்னார். நான் அப்போது அவரிடம் அவருடைய செல்போன் நம்பரை கேட்டு வாங்கி எனது செல்போனில் பதிவு செய்து கொண்டேன். என்னால் அவர் சொன்னபடி 15.2.2023-ம் தேதி மின்சார வாரிய அலுவலகத்திற்கு செல்ல முடியவில்லை. பின்னர், 16.2.2023-ம் தேதி காலை சுமார் 10.50 மணிக்கு எனது செல்போன் நெம்பர் 9965617273-லிருந்து அவரது செல்போன் நம்பர் 8248271948-ற்கு கூப்பிட்டு மின்சார இணைப்பு பற்றி கேட்டுவிட்டு, ஆபிசிற்கு வரலாமா என்று கேட்டேன். அதற்கு அவர் தான் இன்றைக்கு லீவு என்றும், தான் ஏற்கனவே கேட்ட ரூ.3,000/-ம் பணத்துடன் நாளை 17.2.2023-ம் தேதி காலையில் உக்கரம், ஈபி ஆபிசுக்கு வாங்க, கரண்ட் சர்வீஸ் சீக்கிரம் கொடுத்துவிடலாம், பணம் கொடுக்கவில்லையென்றால் சர்வீஸ் கிடைக்க லேட்டாகும் என்று சொன்னார். பின்னர், நான் யோசித்து பார்த்தபோது, அவர் சொன்னபடி மின்சார வாரியத்திற்கு உரிய பீஸ் கட்டிவிட்ட பிறகும், கமர்சியல் அசிஸ்டெண்ட் திரு.சுந்தரத்திற்கு ரூ.3,000/-த்தை லஞ்சமாக கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே, எனக்கு மின் இணைப்பு வழங்க ஏற்பாடு செய்ய லஞ்சமாக பணம் கேட்கும் உக்கரம் மின்சார வாரியத்தில் பணிபுரியும் கமர்சியல் அசிஸ்டெண்ட் திரு.சுந்தரத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். என்னிடம் சுந்தரம் கேட்ட ரூ.3,000/- பணத்தை கொண்டு வந்துள்ளேன் என்பதை தெரிவித்து கொள்கிறேன். இப்படிக்கு, கையொப்பம் XXXX (S.மூர்த்தி) 16.2.2023.

Sir, Received the above said computer typed complaint on 16.02.2023 at 16.00 hrs. Sd/- (xxxxxxxx) 16.2.2023 M.Rekha, Inspector of Police, V&AC, Erode.

Sir, A confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Erode Vigilance and Anti-Corruption Cr.No.02/AC/2023 u/s 7(a) of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 at 17.00 hrs today on 16.2.2023. Sd/- (xxxxxxxx) 16.2.2023 M.Rekha, Inspector of Police, V&AC, Erode.

Original FIR along with the original complaint of Tr.S.Moorty, S/o Subrmaniya Gounder (Late), D.No.8/172, Puthuthottam, Kalikulam, Ukkaram Post, Sathyamangalam Taluk, Erode District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Erode and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

Rekha 16.2.2023

(M.Rekha)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.